
# பசு சொல்லும் பாலின் கதை



பால் கறக்குமிடத்தில்
சுத்தமான பால் பெறுதல்

தரம் மற்றும் பால் பண்ணை நிர்வாகம்

நேஷனல் டெய்ரி டெவலப்மென்ட் போர்டு
ஆனந்த்

# முன்னுரை

வீட்டில் பசு மற்றும் எருமைகளை வைத்து பராமரித்து, பால் கறந்து பால் கூட்டுறவு சங்கத்திற்கு கொடுப்பதுடன் உங்கள் கடமை முடிந்து விடுவதில்லை. இப்போது நமது நாடு பால் உற்பத்தியில் உலகிலேயே முதலாவது இடத்தை வகிக்கின்றது. ஆனால் தூய்மையான பால் உற்பத்தி, விரைவில் கெட்டுப் போகாத தன்மை மற்றும் கால்நடைகளை நோய் தாக்காது பராமரித்தல் போன்றவையும் முக்கியமானவை. தூய்மையான பாலால் சிறந்த பால் பொருட்களை தயாரித்தால் நமக்கும் நமது கூட்டுறவு சங்கத்திற்கும் இரண்டிற்குமே நல்ல லாபங்கள் கிடைக்கும். எனவே, இதற்காக நாம் கீழ்க்கண்ட வழிமுறைகள் சிலவற்றை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

(1) கால் நடையை சுத்தமாக நோய் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(2) கால்நடையை கட்டுமிடம் சுத்தமாக இருக்க வேண்டும்.

(3) அவைகள் குடிப்பதற்கு சுத்தமான குடிநீரை வைக்க வேண்டும்.

(4) பால் கறக்க மற்றும் பாலை ஊற்றி வைக்க சுத்தம் செய்யப்பட்ட ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களை பயன்படுத்த வேண்டும்.

(5) பால் கறப்பற்கு முன்பு கைகளை சோப்பால் தேய்த்துக் கழுவி சுத்தம் செய்ய வேண்டும்.

(6) பால் மடி மற்றும் காம்புகளை சுத்தமான தண்ணீரால் கழுவி, சுத்தமான உலர்ந்த துணியால் நன்கு துடைக்க வேண்டும்.

(7) பாலை பாத்திரத்தில் கறக்கும் முன்பு, பால் மடியிலிருந்து முதல் ஒன்றிரண்டு முறை கறக்கும் பாலை தூர ஊற்றிவிட வேண்டும்.

(8) பால் கறக்கும் நபர்கள் சுத்தமானவராகவும், நோய்ப் பாதிப்பு இல்லாதவர்களாகவும் இருக்க வேண்டும். பீடி, தம்பாக்கு, புகையிலை, வெற்றிலை போன்றவற்றை பால் கறக்கும்போது பயன்படுத்தக் கூடாது.

(9) பால் தரும் கால்நடைக்கு பசுமையான புல்லைக் கொடுக்க வேண்டும்.

(10) பால் கறந்த பின்பு, பால் மடியை சுத்தமான தண்ணீரால் கழுவி சுத்தம் செய்ய வேண்டும். இதனால் பால் மடியில் நுண்கிருமிகளின் பாதிப்பு ஏற்பட்டு நோய் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

(11) கறந்த பாலை பாத்திரத்தில் ஊற்றி நன்கு மூடி உடனடியாக பால் கூட்டுறவு சங்கத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.


(12) இயலுமானால், பால் கூட்டுறவு சங்கத்தில் பாலை குளிர்ச்சியாக வைக்க முயற்சி செய்ய வேண்டும். இதனால் நீண்ட நேரம் பால் கெட்டுப்போகாமல் இருக்கும்.

மேற்கண்ட அனைத்து விஷயங்களையும் நாம் சரியாகக் கடைப்பிடித்தால், நம் மூலமாக பால் கூட்டுறவு சங்கத்திற்கு அனுப்பப்படும் பாலால் நம் அனைவருக்குமே நல்ல லாபம் கிடைக்கும். வாருங்கள் நாம் பாலை சுத்தமாகக் கறந்து வழங்கும் பணியைத் தொடங்குவோம்.

பொது மேலாளர்
(தரம் மற்றும் பால் பண்ணை நிர்வாகம்)
நேஷனல் டெய்ரி டெவலப்மென்ட் போர்டு
ஆனந்த்- 388 001.


# பசு சொல்லும் பாலின் கதை

ராஜ்நகர் என்ற ஊரில் பன்வாரி என்ற ஒரு நபர் வாழ்ந்து வந்தார். அவரிடம் பால் கறக்கும் கால்நடைகள் இருந்தன. அவருக்கு இரண்டு சின்னஞ்சிறு குழந்தைகளும் பிரியமான ராதா என்ற மனைவியும் இருந்தார்கள். பன்வாரியின் குடும்பம் மிகவும் ஆனந்தமாக, சுகமாக இருந்தது. ஏனெனில் அவரது பசுவான கங்கா மற்றும் எருமையான ஜமுனா இரண்டுமே அதிக அளவு பாலை தினமும் அளித்து வந்தன. பன்வாரி கங்கா மற்றும் ஜமுனா விடம் பால் கறந்து அதை அந்த ஊர் பால் கூட்டுறவு சங்கத்திற்கு கொடுத்து வந்தார். இவ்வாறு அவர் பல ஆண்டுகளாக பால் வழங்கிக் கொண்டு இருந்தார். பால் பண்ணைக்கு பாலை அளிப்பதன் மூலம், பன்வாரிக்கு பல மடங்கு லாபம் கிடைத்தது. அதோடு அவர் வீட்டில் எந்தப் பொருளுக்கும் குறைவில்லை. அவரது குடும் பத்தார் நல்ல உணவு வகைகளை சாப்பிட்டனர். அவர் குழந்தைகள் அந்த ஊர்ப் பள்ளியில் படித்து வந்தனர். அது மட்டுமல்ல, ஒவ் வொரு பண்டிகையையும், அவரும், அவர் குடும்பத்தாரும் ஆனந்தமாகக் கொண்டாடினர். பன்வாரி தான் ஒரு மிகப்பெரும் அதிர்ஷ்டசாலி என்றே நினைத்துக் கொண்டார். ஏனெனில் அவரிடம் கங்கா என்ற பசுவும் ஜமுனா என்ற எருமையும் இருந்ததே. ராதாவும், குழந்தைகளும் கூட கங்கா மற்றும் ஜமுனாவிடம் மிகவும் அன்பாக இருந்தார்கள்.



பன்வாரியின் ஆனந்தமான குடும்பம்

ஆனால், ஆனந்தமாக இருந்த இந்த குடும்பத்தில் எதிர்பாராத ஒரு துன்பம் குறுக்கிட்டது. கங்காவுக்கு ஏதோ ஒரு நோய் தாக்கி, அது உடல் பலவீனமடைந்தது. பன்வாரி அதற்கு என்னவெல்லாமோ சிகிச்சைகள் தனக்குத் தெரிந்தவரை செய்தார். ஆனால் அதனால் எந்தவித பயனும் ஏற்பட வில்லை. அதோடு மட்டுமல்லாமல், கங்கா தரும் பாலின் அளவும் குறைந்து போனது. அந்த பாலும் சுத்தமானதாக இல்லை. பன்வாரிக்கு கிடைத்து வந்த வருமானம் குறைய ஆரம்பித்தது. அதோடு அவர் வீட்டிலும் பல பிரச்சினைகள் ஏற்படத் துவங்கின. ராதா வேண்டாம் என பலமுறை தடுத்தும் இந்த பிரச்சினைகள் எல்லாவற்றிலும் இருந்தும் விடுதலை பெற எண்ணிய பன்வாரி கங்காவை விற்று விடுவது என முடிவு செய்தார்.



கங்காவுக்கு நோய், குடும்பத்தில் கவலை, வருமானம் குறைவு.


சிறிது காலத்திற்குப் பின்பு, அந்த ஊரில் கால்நடைகளை விற்கும் மாட்டுத்தாவணி ஒன்று நடத்தப்பட இருந்தது. பன்வாரி அந்த மாட்டுத் தாவணியில் கங்காவை விற்று விட்டு வேறு ஒரு புதிய பசுவை வாங்க வேண்டுமென்று முடிவெடுத்தார்.



பன்வாரி கங்காவை விற்க மாட்டுத் தாவணிக்கு ஓட்டிச் செல்கிறார்

அந்த நாளில் பன்வாரி கங்காவுடன் மாட்டுத் தாவணிக்குப் புறப்பட்டார். ராதாவும் குழந்தைகளும் கங்காவைப் பிடித்துக் கொண்டு அழுதனர். பன்வாரியின் கண்களிலும் கண்ணீர் திரண்டது. எனினும் அவர் தனது மனதைத் திடப்படுத்திக் கொண்டார். வீட்டிலுள்ள குடும்பத்தாரை சமாதானப் படுத்தி விட்டு கங்காவுடன் புறப்பட்டார்.

செல்லும் வழியில். பன்வாரி சிறிது நேரம் ஒரு மரத்தடியில் ஓய்வு எடுத்தார். அவர் மனதில் மிகுந்த வருத்தம். அதோடு கங்காவின் மருண்ட கண்ணீர் ததும்பிய கண்களைப் பார்த்ததும் அவர் ''நான் பாவம் செய்கிறேன் கங்கா'' என்று நெகிழ்ந்த குரலில் கூறினார். பின்பு பன்வாரி ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்த போது ஓர் குரல் ''அண்ணே'' என கூப்பிட்டது. அவர் திடுக்கிட்டு பார்த்தார். கங்காதான் அப்படிப் பேசுகிறது என்பதைக் கவனித்தார். ''அண்ணே, என்னை என் குடும்பத்தில் இருந்து பிரிக்காதீர்கள், என்னை விற்று விடாதீர்கள் அண்ணே'' என்றது கங்கா. பன்வாரி குழம்பிப் போனார். தான் காண்பது கனவா, நனவா எனச் சிந்தித்து திகைத்துப் போன அவர் கங்காவுடன் பேசத் தொடங்கினார். ''என்ன செய்வது, கங்கா, எனக்கு வேறு வழியில்லை. நீ தரும் பாலும் குறைந்து விட்டது. அந்தப் பாலும் தரமானதாக இல்லை. இதனால் எங்கள் வருமானம் மிகவும் குறைந்து விட்டது. வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள நான் உன்னை விற்று விட்டு வேறு பசு வாங்கி வரப் போகிறேன். எனக்கு உன்னை விற்பதற்கு மிகவும் வருத்தமாகத்தான் உள்ளது. ஆனால் உனக்கு என்ன நோய் பாதித்துள்ளது, ஏன் பால் குறைவாக இருக்கிறது, அதுவும் கெட்டுப் போன பாலாக இருக்கிறது என்பதை எல்லாம் என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை'' என்றார்.



செல்லும் வழியில் கங்கா பன்வாரியிடம் பேசுகிறது

''ஆனால் இதில் என் மீது என்ன தவறு இருக்கிறது?'' என்று கங்கா கேட்டது.

இதுவே தக்க தருணம் என நினைத்த பன்வாரி, தனது முடிவை நியாயப்படுத்தும் விதத்தில் ''கங்கா, இதெல்லாம் கடவுளின் இஷ்டம்'' என்றார்.

அதற்கு கங்கா ''இதில் கடவுளின் வேலை ஒன்றுமில்லை. மன்னித்துக் கொள்ளுங்கள் அண்ணே, ஒரு உண்மையைச் சொல்கிறேன். தவறுகள் முழுவதற்கும் பொறுப்பு நீங்களும் ராதா அண்ணியும்தான். உங்களுக்கு எங்களைக் கவனமாகப் பராமரிக்கத் தெரியவில்லை'' என்றது.

பன்வாரி பதட்டத்துடன் ''நீ என்ன சொல்கிறாய் கங்கா? நாங்கள் பரம்பரை பரம்பரையாக மாடுகளை வளர்க்கிறோம். தெரியுமா?'' என்று கேட்டார். ''அப்படியா, சரி, இதை உங்களுக்கு விளக்க நான் பாலின் கதையைச் சொல்கிறேன் என்றது'' கங்கா.

பன்வாரிக்கு ஒன்றும் புரியவில்லை. ''பாலின் கதையா?'' என்று வினவினார் அவர்.


''ஆமாம், பாலை சுத்தமாகக் கறந்து, அதைத் தரமாகப் பாதுகாத்து வைத்திட மாடுகளை எப்படிப் பராமரிக்க வேண்டும் என்பதற்குரிய முழு விபரங்களும் பாலின் கதையில் உள்ளன'' என்றது கங்கா.

''இந்தக் கதையை உனக்கு யார் சொன்னது?'' என்று கேட்டார் பன்வாரி.

அதற்கு கங்கா ''ஒரு நாள் நானும் ஜமுனாவும் பசுமையான புல்வெளிகளைத் தேடிச் சென்றோம். அங்கே நாங்கள் கௌரி மற்றும் பாரோ என்ற பெயருள்ள பசுக்களையும், சம்பா என்ற எருமையையும் சந்தித்தோம். அவைகளுக்கு என்றுமே நோய் வந்ததில்லையாம் அதோடு அவைகள் குறைவாக பால் தந்ததுமில்லை, பாலின் தரமும் குறைந்ததில்லையாம் என அவைகளிடமிருந்து கேள்விப் பட்டோம்'' என்றது.

''அப்படியா?'' வியந்தார் பன்வாரி.

''ஆமாம், அவைகளின் உரிமை யாளர் பால் பண்ணைத் தொழில் நுட்பத்தை படித்தவர். கௌரி, சம்பா மற்றும் பாரோ மூன்றும் எங்களுக்கு மாடுகளின் வசிப் பிடம் பற்றியும், பாலை சுத்தமாக கறந்து, பத்திரப்படுத்துதல் பற்றியும் கூறின. நான் அந்தக் கதையை உங்களுக்குச் சொல்கிறேன்'' என்றது கங்கா.



கௌரி, சம்பா, பாரோ பாலின் கதையை கங்காவுக்கும் ஜமுனாவுக்கும் கூறுகின்றன

''ரொம்ப நல்லது, சொல் ''என வேண்டினார் பன்வாரி.

பாரோ : சகோதரிகளே, உங்களது பிரச்சினைகளைப் பார்த்து என் மனம் கலக்கமடைகிறது. நான் மற்றும் எனது சகோதரிகளான கௌரி மற்றும் சம்பா மூவரும், உங்கள் முதலாளி எப்படி உங்களைப் பராமரிக்க வேண்டும். மேலும் பால் கறப்பது, பத்திரப்படுத்துவது எப்படி என்பதையும் உங்களுக்கு விளக்குகிறோம்.

சம்பா : எங்களது பேச்சை நன்கு சரிவரக் கவனித்து உங்கள் முதலாளியிடம் சொல்லுங்கள். எங்களது ஆலோசனைகளின்படி நடந்தால், உங்களுக்கு எப்போதுமே நோய்கள் ஏற்படாது.

கௌரி : மேலும் தரமான பால் அதிகம் கிடைக்கும் என்பதுடன், உங்கள் முதலாளியின் வருமானமும் முன்பிருந்ததை விட அதிகமாகும்.

கங்கா : சொல்லுங்கள் சகோதரிகளே, நாங்களும் அதை தெரிந்து கொள்ளுகிறோம்.

கௌரி : முதலில் பாலைப் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்ளுங்கள். நம் இனத்தில் பசுவோ, எருமையோ எதுவாக இருந்தாலும் சரி, அது ஆரோக்கியமாக இருந்தால்தான் அவைகளிடமிருந்து கறக்கப்படும் பாலில் குறை இருக்காது.

சம்பா : தரமான, நல்ல பாலைப் பெற, மாடுகள், மாடுகளைக் கட்டுமிடம் அவைகளைப் பராமரிப்போர், பாலைப் பத்திரப்படுத்தும் பாத்திரங்கள் போன்ற விஷயங்களில் மிக சுத்தமாக இருக்க வேண்டும் என்பதில் மிகுந்த கவனம் செலுத்துவது அவசியம். அதோடு, பால் கறக்கப்பட்ட உடன் மிக விரைவாக அதை பால் கூட்டுறவு சங்கத்திற்கு கொண்டு சென்று கொடுக்க வேண்டும். இந்த விஷயங்களில் போதுமான கவனம் செலுத்தாவிட்டால், பாலில் நுண்கிருமிகள் பெருகி விடுகின்றன. பாலும் கெட்டுப்போய் விடுகிறது.

ஜமுனா: நுண்கிருமிகளா? பாலில் நான் இதுவரை அப்படி பார்த்ததே இல்லையே?

பிற அனைத்தும் : நுண்கிருமிகளா? ஆமாம், நாங்களும் கூட எப்போதுமே பார்த்தது இல்லையே?

பாரோ : ஏனெனில், நுண்கிருமிகள் மிகவும் சிறிய உருவம் கொண்டவை. யார் கண்களுக்கும் தெரியாது. இவைகளை உருப்பெருக்கிக் கண்ணாடி மூலம் மட்டுமே பார்க்க முடியும். இந்த நுண்கிருமிகள் பாலின் தரத்தை குறைத்து விடுகின்றன.

கங்கா : அதாவது, நீ சொல்லியபடி எவர் ஒருவர் சுத்தத்தின் மீது கவனம் செலுத்துகிறாரோ, அங்கு பால் சுத்தமாக இருக்கும் என்கிறாய். அப்படித்தானே?




நுண்கிருமிகளை பார்க்க உதவும் உருப்பெருக்கி

பாரோ : நீ சரியாகச் சொன்னாய் சகோதரி. சுத்தமாக, ஆரோக்கியமாகப் பராமரிக்கப்படும் பசு அல்லது எருமை, கூட்டுறவு சங்கத்தில் சுத்தமாக இருக்கும் மனிதர்கள், பாலை ஊற்றி வைக்க சுத்தமான பாத்திரங்கள், மற்றும் பால் பண்ணையின் சுற்றுப்புறங்களை சுத்தமாக பராமரித்தல் இவை மூலம் பாலில் நுண்கிருமிகளும் மிகக் குறைவாகவே இருக்கும். மேலும் அதில் தூசுகள், ஈக்கள் போன்றவைகளும் விழ வாய்ப்பிருக்காது.

சம்பா : அதோடு, கறந்த பாலை மூடி உடனடியாக கூட்டுறவு சங்கத்திற்கு எடுத்துச் சென்றால் நீண்ட நேரத்துக்கு அதன் தரம் குறையாமலிருக்கும்.

பாரோ : மேற்கண்ட விஷயங்களைக் கேட்கும்போது உங்களுக்கு பதட்டம் ஏற்படலாம். ஆனால், அவைகளைச் சரியாகக் கடைப்பிடிக்காவிட்டால், கூட்டுறவு சங்கத்திற்கு பாலை கொண்டு செல்வதற்குள் பாலில் நுண்கிருமிகள் ஆயிரக்கணக்காக, ஏன் இலட்சக் கணக்காக கூடப் பெருகி விடும்.

ஜமுனா: ஐயோ !

கௌரி : ஆமாம், அதோடு இந்த நுண்கிருமிகள் 15 முதல் 20 நிமிடங்களுக்குள் இரட்டிப்பாகி விடுகின்றன. இதனால் பாலின் தரம் விரைவில் மிகவும் குறைந்து போய்விடும்.


ஜமுனா: ஆனால், சுத்தமான பாலால் எங்கள் முதலாளிக்கு என்ன லாபம்?

கௌரி : பால் சுத்தமாகவும், தரமாகவும் இருந்தால், அதைக் குடிப்பவர்களும் கூட ஆரோக்கியமாக இருப்பார்கள் அல்லவா? மேலும் அவர்கள் நல்ல தரமான பால் என்பதற்காக அதே கூட்டுறவு சங்கத்தில் தொடர்ந்து பால் வாங்குவார்கள்.

சம்பா : இத்தகைய தரமான பாலில் இருந்து செய்யப்படும் எல்லா பண்டங்ளும் உயர்தரமாகவும், ருசியாகவும், இருக்கும். அந்த பண்டங்கள் விரைவில் கெட்டுப் போகாது. இதனால் கால்நடைகளைப் பராமரிப்பவர்களுக்கும் மற்றும் கூட்டுறவு சங்கத்திற்கும் வருமானமும் பெருகுமே.

கங்கா : சகோதரி, எங்களுக்கு பாலை சுத்தமாக வைத்திட ஆலோசனையைக் கூறுங்கள்.

பாரோ : அதற்கு முதலில் பால் தரும் பசு அல்லது எருமை ஆரோக்கியமாக இருக்கும்படி பராமரிக்க வேண்டியது அவசியம். அவைகளைக் கட்டுமிடம் மிகத் தூய்மையாக இருக்க வேண்டும். உங்களை எங்கே கட்டிப் போட்டிருக்கிறார்கள்?




நோயற்ற சுத்தமான பசு

ஜமுனா: எங்களை எங்கள் உரிமையாளரின் வீட்டிலிருந்து இரண்டு வீடுகள் தள்ளி ஒரு மரத்தடியில் கட்டிப் போட்டு உள்ளனர். ஆனால் உட்காருவதற்கு இடவசதி இல்லை. அந்த இடம் அழுக்காகவும், சுகாதாரமின்றியும் இருக்கிறது. ஏனெனில் அங்கு மூத்திரம் மற்றும் சாணி கிடக்கிறது. சுத்தம் செய்யப்படுவதில்லை. நாங்கள் எங்களின் கழிவுகளின் மேல்தான் உட்காருகிறோம்.

சம்பா : நீங்கள் கட்டிப் போடப்படும் இடம் சுத்தமாகவும், போதிய பரப்பளவுடனும் ஓய்வெடுக்க வசதியாகவும் இருக்க வேண்டும். அதோடு நீங்கள் குடிக்க சுத்தமான குடி தண்ணீரும் வைக்கப்பட வேண்டும்.

கௌரி : மேலும் அந்த இடத்தின் அக்கம் பக்கத்திலுள்ள இடங்கள் கூட மிகத் தூய்மையாக பராமரிக்கப்பட வேண்டும். பால் கறக்கும் இடத்தில் எல்லாமே குவிந்து குப்பையாக இருக்கக் கூடாது.

பசு அல்லது எருமையைக் கட்டுமிடத்தில் மண், தூசிகள் இல்லாதபடி சுத்தம் செய்ய வேண்டும். அதோடு ஈக்கள் இல்லாமல் இருப்பது ரொம்ப நல்லது.




பசு அல்லது எருமை சுத்தமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் ஓய்வெடுக்க வசதியாக தளம் போடப்பட வேண்டும்.

கங்கா : வேறு என்ன செய்ய வேண்டும்?

கௌரி : கால்நடைகளைக் கட்டும் இடம் சாணி, மூத்திரமின்றி சுத்தம் செய்யப்பட வேண்டும். தண்ணீர், மூத்திரம் வெளியேறுமாறு மடை இருக்க வேண்டும்.

பாரோ : சாணியை அவ்வப்போது அகற்றி தூரத்தில் உரக் குழியிலோ அல்லது சாண எரிவாயுத் தொட்டியிலோ போட வேண்டும்.



மாடுகளைக் கட்டுமிடத்திற்கு தொலைவில் உள்ள உரக்குழியில் அல்லது சாண எரிவாயுத் தொட்டியில் சாணியைப் போடவும்

இவ்வளவு நீளமாக பாலின் கதையைக் கேட்ட கங்கா பிரமித்துப் போனது. பன்வாரி கங்கா சொல்வதை மிகக் கவனமாகக் கேட்டான். மேலும் தெரிந்து கொள்ள விரும்பியவனாக, கங்காவிடம் ''எனக்கு முழுக் கதையையும் விபரமாகச் சொல். பாரோ, கௌரி, சம்பா வேறு என்ன என்ன சொன்னார்கள்?'' என்று ஆர்வத்துடன் கேட்டார்.

''மேலும் பல விஷயங்களை அவை

விளக்கின. ஆனால், அதையெல்லாம் நான் இப்போது சொல்லிக் கொண்டிருந்தால், பொழுதுபோய் விடும். வீட்டில் ராதா அண்ணியும், குழந்தைகளும் உங்களைக் காணாமல் பதட்டப்படுவார்கள். வீட்டுக்குப் போகலாம். மீதிக் கதையை வீட்டுக்குப் போகும் வழியில் சொல்கிறேன்'' என்றது கங்கா.



பன்வாரி கங்காவுடன் வீடு திரும்புகிறார்

கங்கா சொல்வதும் சரியென்று தோன்றியது பன்வாரிக்கு. அவர் மீண்டும் கங்காவுடன் வீட்டுக்கு புறப்பட்டார். சிறிது தூரம் சென்றதும் அவருக்கு ஞாபகம் வந்தது. சட்டென நின்றபடி சொன்னார் ''ஆனால் நாம் மாட்டுத் தாவணிக்கு அல்லவா போய்க் கொண்டு இருந்தோம்'' என்று கேட்டார்.


கங்காவின் மனதிலோ வீடு திரும்பும் மகிழ்ச்சி. ஆனால், பன்வாரி இப்படிச் சொன்னவுடன், மனம் வருந்திய கங்கா ''அண்ணே, இதற்காகத்தான் நான் உங்களுக்கு இவ்வளவு விபரங்கள் சொன்னேன். இதை நீங்கள் சரிவரக் கடைப்பிடித்தால் எனக்கு எப்போதுமே நோய் வராது, முன்பை விட அதிகமாக, சுத்தமான பால் தருவேன். உங்கள் வருமானமும் அதிகரிக்கும். பின்பு ஏன் மீண்டும் என்னை மாட்டுத் தாவணியில் விற்க வேண்டும் என்கிறீர்கள்?'' என்று கேட்டது.

பன்வாரி சிறிது நேரம் யோசித்தார். ''நல்லது. நீ சொல்லியபடி ஒரு முறை சரியான முறைகளைக் கடைப்பிடிக்கிறேன். உனக்கு உடல் நலம் சரியாகி விட்டால் நீ எப்போதுமே எங்களுடன் இருக்கலாம். வா, இப்போது மேலும் கதையைத் தொடர்ந்து சொல்'' என்றார்.

கங்காவின் மனதில் ஆனந்தம் ததும்பியது. மேலும் தொடர்ந்து ''இதற்குப் பின்பு சம்பா மற்றும் பாரோ இரண்டும் பால் கறப்பதைப் பற்றி சொன்னவற்றை கேட்போம்'' என தொடர்ந்தது.

பாரோ : பால் கறப்பவர்கள் நோய்வாய்ப்பட்டு இருந்தால், அவர்களின் நோயால் பாலிலும் பாதிப்பு ஏற்படும்.

சம்பா : எனவே, யாருக்காவது ஜலதோஷம், இருமல், பேதி, எலும்புருக்கி நோய் (டி.பி.), சரும நோய்கள் அல்லது அதற்கான அறிகுறிகள் இருந்தால், அவர்கள் பால் கறக்கக் கூடாது.



பால் கறப்பவர்கள் சுத்தமாக இருக்க வேண்டும்.

பாரோ : காயங்கள், கொப்புளங்கள், புண்கள் அல்லது கைகளில் வெட்டுக்கள் இருந்தால் அவர்கள் அதற்கான மருந்து தடவி பிளாஸ்திரி போட்டுக் கொண்டபின்பே பால் கறக்க வேண்டும்.

சம்பா : பால் கறப்பவர்கள் சுத்தமாக இருக்க வேண்டும். அவர்கள் அழுக்கில்லாமல், சுத்தமான உடைகள் அணிந்திருக்க வேண்டும். பால் கறக்கும் நேரத்தில் பால் கறப்பவர் அல்லது அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் இருமவோ, துப்பவோ கூடாது. எனவே, அருகில் வெற்றிலை பாக்கு, புகையிலை, பான்-மசாலா போன்றவைகளை மெல்லுதல் கூடவே கூடாது.

இந்த அனைத்து விஷயங்களையும் கேட்ட பன்வாரி ''உண்மைதான் கங்கா. நாங்கள் இந்த எல்லாத் தவறுகளையும் செய்கிறோம். இனிமேல் பால் கறக்கும் நேரத்தில் இந்த எல்லா விஷயங்களையும் நினைவில் வைத்துக் கொள்வோம்'' என்றார்.


இவ்வாறு பேசிக் கொண்டே பன்வாரியும் கங்காவும் வீடு வந்து சேர்ந்தனர். கங்காவை மீண்டும் வீட்டுக்கு அழைத்து வந்ததைக் கண்டதும் ராதாவுக்கும் குழந்தைகளுக்கும் மிகவும் ஆனந்தம். ராதா பிரமிப்புடன் ''என்ன இது? கங்காவை மீண்டும் அழைத்து வந்து வீட்டீர்கள்?'' என்று கேட்டாள். பன்வாரி ஒன்றும் சொல்லவில்லை. இரவு எல்லோரும் சாப்பிட்டு, குழந்தைகள் தூங்கிய பின்பு பன்வாரி ராதாவிடம் கங்கா தன்னிடம் சொன்ன பாலின் கதையைச் சொன்னார். ராதாவுக்கு அதைக் கேட்டதும் ஆனந்தமும், ஆச்சரியமும் ஏற்பட்டன. அடுத்த நாள் பன்வாரியும், ராதாவும் கங்காவிடம் சென்றனர். ராதா ''கங்கா, உன் அண்ணன் என்னிடம் பாலின் கதையைச் சொன்னார். நீ கவலைப்படாதே - நாங்கள் நீ சொல்லியதை நினைவில் வைத்துக் கொண்டுள்ளோம். அதோடு உன் தோழிகள் சொல்லியபடி நடப்போம்'' என்றாள்.

கங்காவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. ''அண்ணி, என் வாழ்க்கை முழுவதும் நான் உங்களுக்குச் சேவை செய்வேன். ஆனால் மற்றுமொரு விஷயத்தையும் நீங்கள் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். இதனால் நானும் ஜமுனாவும் ஆரோக்கியமாக இருப்போம். மேலும் சுத்தமான, ஊட்டச் சத்துள்ள பாலை அதிகமாகவும் தரமுடியும்'' என்று கூறியது கங்கா.

''கங்கா, இன்னும் என்னென்ன விஷயங்களை நாங்கள் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்?'' என்று கேட்டாள் ராதா.


அதற்கு கங்கா ''வீட்டில் பறக்கும் ஈக்கள் எங்களின் எதிரிகள். ஈக்களின் உடலில் லட்சக் கணக்கான நுண்கிருமிகள் உள்ளன. இவைகளால் எல்லா வியாதிகளும் பரவுகின்றன. பாலைக் கூட இவைகள் கெடுத்து விடும்'' என்றது.

''அப்படியா? அதாவது ஈக்களிடமிருந்து பாலைக் காப்பாற்றினால் பால் சுத்தமாக இருக்கும் என்கிறாயா?'' என்று கேட்டாள் கங்கா.



ஒரு ஈயின் உடலில் கிட்டத்தட்ட பதினொரு லட்சம் நுண்கிருமிகள் உள்ளன.

கங்கா : ஆமாம்; ஈக்களிடமிருந்தும், பிற அசுத்த அம்சங்களிடம் இருந்தும் பாலைக் காப்பாற்ற வேண்டுவது கட்டாயம். பசுவின் அல்லது எருமையின் உடலில் அசுத்தங்கள் இருந்தால், அவைகளில் கோடிக்கணக்கான நுண்கிருமிகள் இருக்கும்.



பால் கறக்கும் முன்பு கால்நடைகளை மெல்லிய பிரஷ் மூலம் தேய்த்து சுத்தம் செய்யவும். வெப்பமான நாட்களில் தினமும் தண்ணீரால் உடலை சுத்தம் செய்யவும்.

எனவே பால் கறக்கும் முன்பு அவைகளின் உடலை சுத்தம் செய்வது அவசியம். வெப்பமான நாட்களில் கால்நடைகளை தண்ணீரால் சுத்தம் செய்ய வேண்டும். மற்றும் அவைகளின் உடலை மெல்லிய பிரஷ் மூலம் தேய்த்து சுத்தம் செய்வதால் அவைகளின் உடல் மற்றும் முடிகளில் நுண்கிருமிகள் தங்காமல், வெளியேற்றப்படும்.


ராதா : நல்லது ! இதையும் நான் ஞாபகம் வைத்துக் கொள்வேன்.

கங்கா : சுத்தமான பாலைப் பெற பால் கறக்கும், மற்றும் பாலை ஊற்றும் பாத்திரங்களும் சுத்தமாக இருக்க வேண்டும். பால் பாத்திரத்தை சோப்பால் நன்கு தேய்த்துக் கழுவி சுத்தம் செய்ய வேண்டும். இதனால் பாத்திரத்தில் அழுக்குகள், தூசிகள் இருக்காது. இதை நன்கு ஞாபகம் வைத்துக் கொள்வது அவசியம். பால் பாத்திரங்களை கழுவிய பின்பு, அவைகளை உலர வைக்க, அதற்குரிய இடத்தில் தலைகீழாக கவிழ்த்து வைக்க வேண்டும்.

ராதா : சரி.

கங்கா : பசு மற்றும் எருமை இரண்டின் பால் மடிகளையும் சுத்தமான தண்ணீரால் தேய்த்துக் கழுவி, சுத்தமான துணியால் துடைத்து உலரவிட வேண்டும்.

ராதா : ஆனால், நான் அப்படித்தானே செய்கிறேன்.




பசு மற்றும் எருமை இரண்டின் பால் மடிகளையும் சுத்தமான தண்ணீரால் தேய்த்துக் கழுவி, சுத்தமான துணியால் துடைத்து உலரவிட வேண்டும்

கங்கா : நீங்கள் உங்கள் சேலைத் தலைப்பால் எங்கள் பால் மடிகளைத் துடைக்கிறீர்கள். அந்த சேலை அழுக்காக இருக்கலாம் அல்லவா? எப்போதுமே சுத்தமான துணியை உபயோகியுங்கள். பால் கறக்கும் முன்பு ஒவ்வொரு பால் மடியிலிருந்தும் முதலில் ஒன்றிரண்டு முறை கறக்கும் பால் சொட்டுக்களை தூர ஊற்றிவிட வேண்டும். இதனால் பால் மடியில் தங்கியிருக்கும் நுண்கிருமிகள் நீக்கப்பட்டு விடும்.



பால் கறக்கும் முன்பு ஒவ்வொரு பால் மடியில் இருந்தும் முதலில் ஒன்றிரண்டு முறை கறக்கும் சில பால் சொட்டுக்களை தூர ஊற்றிவிட வேண்டும்

பால் கறக்கும் முன்பு கைகளை சோப் மூலம் தேய்த்து நன்கு கழுவி சுத்தம் செய்ய வேண்டும்.




பால் கறக்கும் முன்பு கைகளை சோப் மூலம் கழுவி சுத்தம் செய்து கொள்ள வேண்டும்

பால் கறப்பவர்கள், கறந்த பாலில் தங்கள் விரல்களால் எப்போதும் துழாவக் கூடாது. அதேபோல பால் மடிகளில் எந்த எண்ணெயையும் தடவக் கூடாது.



கறந்த பாலில் விரல்களை துழாவக் கூடாது


பால் கறக்கும் வேளையில், பால் கறக்கும் பாத்திரத்தின் உள்ளே, பாலில் பால் கறப்பவரின் அங்கங்கள் அல்லது ஆடை நுனி படக் கூடாது.

பன்வாரி : அப்படியா, சரி, சரி.

கங்கா : இன்னொன்றையும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். பால் மடியில் சொட்டு பாலைக் கூட மிச்சம் வைக்காமல் முழுவதையும் கறந்து விடுங்கள்.

ஏனெனில், பால் மிச்சமிருந்தால் அந்த பால் மடியில் நுண்கிருமிகள் புகுந்து விடும். இதனால் மாடுகளுக்கு நோய் ஏற்பட அதிக வாய்ப்புகள் உண்டு.


பால் கறந்த பின்பு, பால் மடியை சுத்தமான தண்ணீரால் நன்கு கழுவ வேண்டும். அதோடு நுண்கிருமி ஒழிப்பான் (அய்டோஃபோர்) கரைசலில் பால் காம்புகளை சற்று நேரம் மூழ்கி இருக்கச் செய்ய வேண்டும்.




பால் கறந்த பின்பு ஒவ்வொரு பால் மடிக் காம்புகளையும் சுத்தமான தண்ணீரால் கழுவி பின்பு நுண்கிருமி ஒழிப்பான் கரைசலில் சிறிது நேரம் பால் காம்புகளை மூழ்கி இருக்கச் செய்யவும்


பன்வாரி : சரி, இந்த விஷயங்களையும் ஞாபகம் வைத்துக் கொள்கிறேன்.

கங்கா : பால் கறக்கும் பாத்திரம் மற்றும் கூட்டுறவு சங்கத்திற்கு பாலை கொண்டு போகும் பாத்திரம் போன்றவை ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களாக இருக்க வேண்டும். அவைகளை மூடியால் சரிவர மூட வேண்டும். இதனால் பாலில் ஈக்கள், அசுத்தம் போன்றவை விழாது. துரிதமாக கூட்டுறவு சங்கத்தில் பாலைக் கொண்டு சேர்த்தால், பால் நீண்ட நேரம் கெட்டுப் போகாமல் இருக்கும்.



*பால் பாத்திரங்களை உலர வைக்க அவைகளைக் கழுவி தலைகீழாக வைக்கவும்.*


பாலின் இந்த கதையைக் கேட்ட பின்பு, பன்வாரியும், ராதாவும் கங்கா சொல்லியபடி செயல்படத் துவங்கினர். முதலில் கூட்டுறவு சங்கத்திற்காக கால்நடைகளுக்கு வைத்தியம் பார்க்கும் மருத்துவர் கங்காவுக்கு சிகிச்சை அளித்தார். சரியான வைத்தியம் கிடைத்ததால் கங்கா சீக்கிரமாக முழுமையாக உடல் நலம் பெற்றது. ராதா கங்கா சொல்லியபடியே எல்லாவற்றையும் பின்பற்றினாள். கங்காவும், ஜமுனாவும் கட்டப்படும் இடம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களை ராதாவும், குழந்தைகளும் நன்கு சுத்தம் செய்தனர்.



*கங்காவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பன்வாரியின் இல்லத்தில் மீண்டும் ஆனந்தம் ததும்பியது.*


இதன் மூலம் கங்கா கறக்கும் பால் சுத்தமாவும், அதிகமாகவும் இருந்தது. பன்வாரி குடும்பத்தாரின் வருமானமும் பலமடங்கு பெருகியது. குடும்பத்தில் ஆனந்தம், செழிப்பு மீண்டும் திரும்பியது. இப்போது பன்வாரி மற்றும் ராதா மேலும் பல பசுக்களை வளர்க்க திட்டமிட்டுள்ளனர்.

சுத்தமாக, நோயில்லாமல் இருக்கும் மாடு




(1)

மாடுகளைக் கட்டுவதற்கு சுத்தமான இடம்




(2)

குடிக்க சுத்தமான தண்ணீர்




(3)

சுத்தமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்




(4)

பால் கறக்கும் முன்பு கைகளை சோப்பால் நன்கு கழுவி சுத்தம் செய்து கொள்ளவும்




(5)

பால் மடிகளை சுத்தமான தண்ணீரால் கழுவி சுத்தமான துணியால் துடைத்து உலர விடவும்




(6)

பால் கறக்கும் முன்பு ஒவ்வொரு பால் மடியிலும் முதலில் ஒன்றிரண்டு முறை கறக்கும் சில சொட்டு பாலை தூர ஊற்றி விடுங்கள்.




(7)

சுத்தமான, நோய்கள் பாதிக்காத பால் கறக்கும் நபர்



(8)

பால் தரும் கால்நடைக்கு பசுமையான புல் போடுங்கள்



(9)

பால் கறந்த பின்பு, பால் மடிகளை சுத்தமான நீரால் கழுவி, பால் காம்புகளை நுண்கிருமி ஒழிப்பான் கரைசலில் சிறிதுநேரம் மூழ்க வைக்கவும்





(10)

பால் பாத்திரத்தை மூடி துரிதமாக பால் கூட்டுறவு சங்கத்திற்கு எடுத்துச் செல்லவும்




(11)

பாலை சீக்கிரமாக குளிர்விக்கும் எந்திரம்



(12)

All rights reserved. No part of this publication may be reproduced in any form, electronic or mechanical without prior written permission from National Dairy Development Board, Anand (India).



**எப்போதேனும் கேள்விப்பட்டு**
**இருக்கிறீர்களா இசையால் மயங்கி**
**பசு அதிக பால் தருகிறது என்று?**

*புராண காலத்தில் இசை இறைவடிவம்*
*என உணரப்பட்டது*
*ஆயுர்வேதம் இந்தக் கருத்துக்கு*
*ஆதரவளிக்கிறது.*
*பல கொடிய நோய்கள் எல்லாம்*
*இசையின் சக்தியால் குணமானது.*
*ஆய்வுகளால் தெரியவந்தது பசுவும்*
*இசை கேட்டு மகிழ்கின்றது என்பது.*
*இசை கேட்பதால்*
*பசு/எருமை இரண்டும்*
*மன அமைதி பெறுகின்றன*
*பால் கறக்கும் போது இனிய இசை*
*ஒலிக்கச் செய்து உண்மையை*
*நீங்களே உணருங்கள்.*

'Tamil' version of the original 'Hindi' book "Doodh Ki Kahani, Gai Ki Zabani"
published by NDDB, Anand.